# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:43** **தேதி:-31.05.2015**

**தமிழக JTO LICE தேர்வில் தலையிட்டு வழிகாட்டுதலை பெற்றுத் தந்தது நமது மத்திய சங்கம்.**

அன்பார்ந்த தோழர்களே,

02.06.2013 அன்று தமிழகத்தில் 35% மற்றும் 15% இடங்களுக்கான JTO தேர்வு நடைபெற்றது. மற்ற மாநிலங்களில் எல்லாம் இதற்கான முடிவுகள் வெளியாகி தோழர்கள் JTOக்களாக பணி புரிந்து வருகின்றனர். ஆனால் நீதிமன்ற வழக்கின் காரணமாக தமிழகத்தில் மட்டும் முடிவுகள் வெளிவருவதில் பிரச்சனை நீடித்தது. சென்னை உயர்நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கும் முடிவுக்கு வந்தது.

அதில் காலிப்பணியிடங்கள் கணக்கீடு தொடர்பாக நமது தமிழ் மாநில நிர்வாகம் கொடுத்த விவரங்களில் குறைபாடு இருந்தது. 2007ஆம் ஆண்டு வரை பதவி அடிப்படையில் காலிப்பணியிடங்கள் கணக்கிடப்படவேண்டும் என்கின்ற கார்ப்பரேட் அலுவலகம் 09.03.2013 அன்று வெளியிட்ட கடித எண் 5-11/2009-Pers IV(Pt)ல் வழி காட்டப்பட்ட அடிப்படையில் கணக்கிடப் படவில்லையென்றும், 2003 முதல் 2011 வரை காலிப்பணியிடங்களே இல்லையென்று நிர்வாகம் தெரிவித்துள்ளதும் சரியல்ல என்றும் கூறி கணக்கீட்டில் உள்ள குறைப்படுகள் நீக்கப்படவேண்டும் என்று தமிழ் மாநில நிர்வாகத்திற்கு மாநில சங்கம் 06.05.2015 அன்று ஒரு கடிதம் கொடுத்திருந்தது. நமது தமிழ் மாநில நிர்வாகம் வழக்கம் போல கார்ப்பரேட் அலுவலகத்திற்கு விளக்கம் கேட்டு கடிதம் அனுப்பியது.

நமது மத்திய சங்கம் உடனடியாக தலையிட்டது. கார்ப்பரேட் அலுவலகத்தில் உள்ள GM(ESTT) செல்வி மது அரோரா அவர்களிடம், 13.05.2015, 19.05.2015 ஆகிய தேதிகளில் நேரடியாகவும், 15.05.2015 அன்று கடிதம் மூலமாகவும், 22.05.2015 அன்று GM(ESTT) செல்வி மது அரோரா மற்றும் AGM(Pers IV) திரு A.K.சிங் அவர்களிடமும் தொடர்ச்சியாக நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்கள் இதற்கான வழிகாட்டுதலை கொடுக்குமாறு வற்புறுத்தினார். இவை அனைத்தும் நமது மத்திய சங்க இணைய தளத்தில் அவ்வப்போது வெளியிடப்பட்டுள்ளது.

நமது மத்திய சங்கத்தின் தொடர் தலையீட்டின் காரணமாக 29.05.2015 அன்று தனது கடித எண் 5-11/2009/Estt IV என்கின்ற கடிதத்தின் மூலமாக AGM(Pers IV) திரு A.K.சிங் அவர்கள் தமிழ் மாநில நிர்வாகத்திற்கு மறு கணக்கீடு செய்யுமாறு பணித்து கேட்டுக் கொண்டுள்ளார்.

தொடர்ச்சியாக இந்த பிரச்சனையில் தலையிட்டு தீர்வு காண உதவிய BSNL ஊழியர் சங்கத்தின் மத்திய தலைமைக்கு தமிழ் மாநில சங்கம் நன்றியையும் பாராட்டுதல்களையும் உரித்தாக்கிக் கொள்கிறது.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**